செய்தி வெளியீடு எண்–546 நாள்–08. 07. 2008

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் அரசால் தொடங்கப்பட்டு அதன் உறுப்பினர் சேர்க்கை தற்போது அனைத்து மாவட்டங்களிலும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இவ்வாரியத்தின் உறுப்பினராக பதிவு செய்ய நாட்டுப்புறக் கலைஞர்கள் 18 வயது நிறைவு செய்து 60 வயது நிறைவு செய்யாமல் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் உறுப்பினர் ஒய்வூதியம் மாதம் ரூ.300/– வீதம் வழங்கவும், மரணம் அடைந்த உறுப்பினர்களின் குடும்பத்தாருக்கு ஈமச்சடங்கு நிதி உதவியாக ரூ.2000/– உறுப்பினராக பதிவு பெற்ற கலைஞர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக பல்வேறு விதமான நிதி உதவி தொகைகளும், திருமண உதவித்தொகை ரூ.2000/–, மகப்பேறு உதவித்தொகை ரூ.6000/– கண் கண்ணாடி வாங்க ரூ.500/– உதவித்தொகையும் வழங்கப்படும்.

இவ்வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்காக சுற்றுலா–பண்பாட்டுத்துறை, அரசுச் செயலாளர் அவர்கள், சென்னையில் ஜுலை 15 –ஆம் தேதி முகாம் இட உள்ளார்கள். இம்முகாம் மாலை 3.00 மணியளவில் நடைபெறும். இம்முகாமில் நாட்டுப்புறக் கலைஞர்கள் பெருமளவில் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யப்படுவார்கள்.

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.